# ஆலயம் மனிதவடிவம்

37

**முனைவர் தி. பார்த்திபன்,**

**உதவிப் பேராசிரியர்,**

**மெய்யியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,**

**தஞ்சாவூர் – 613 010.**

**ஆய்வுச் சுருக்கம்**

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவை மொழி, அதாவது தினமும் தவறாது ஆலயத்திற்கு சென்று இறைவனை வணங்குவது உயிருக்கும், உடலுக்கும் நன்மையளிக்கும். ஆலயம் என்ற சொல்லை இவ்வாறு பிரித்து பொருள் கொள்ளப்படுகிறது. ஆ+லயம் = ஆலயம் ஆ என்றால் ஆன்மாக்கள் அல்லது உயிர்கள் என்றும், லயம் என்றால் லயத்தல், ஒடுங்குதல், ஒருமைப்படுதல் என்பது பொருளாகும்.

ஆலயம் என்பதற்கு ஆன்மாக்கள் மனம் ஒன்றி இலயிக்கும் இடம் என்று பொருள்படும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறைவன் ஆலயங்களின் வழியேதான் உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றான், அதாவது பூமி முழுவதும் தண்ணீர் வியாபித்திருந்தாலும், அதை எடுப்பதற்கு எவ்வாறு கிணறு அமைத்து அதன் வழியே தண்ணீர் நமக்கு கிடைக்கின்றதோ, அதுபோன்று இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் ஆலயங்களில் இருந்து அருள்பாலிக்கின்றான் என்பதே உண்மை. இத்தகு சிறப்பு வாய்ந்த ஆலயங்கள், அதன் அமைப்பு பற்றியும், ஆலய அமைப்பில் மறைந்துள்ள அறிவியல் உண்மை, மெய்யியல் கோட்பாடுகள் ஆகியவற்றை அனைவரும் அறிந்து, வழிபட்டு உயர்வு பெறவேண்டும்.

**கலைச் சொற்கள்**

பிரகாரம், கர்ப்பக்கிரகம், விமானம், பலிபீடம், துவாஜஸ்தம்பம், கோசம், கலசம், ஜீவன், அதிட்டானம், சிகரம், பிரஸ்தரம்

**முன்னுரை**

கோயில் என்பதற்கும், ஆலயம் என்பதற்கும் நுண்ணிய வேறுபாடு உள்ளது. கோயில் என்பது இறைவன் குடியிருக்கின்ற இடமாகிய கருப்பக் கிரகத்தைக் அல்லது கருவறையைக் கோயில் என்கிறோம். ஆலயம் என்பது கருப்பக்கிரகம், பிரகாரங்கள், பிற தெய்வங்கள், கோபுரங்கள், கொடிமரம், பலிபீடம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தீர்த்தம், தலவிருட்சம் இவை அனைத்தும் உள்ளதை ஆலயம் என்கிறோம். இந்த ஊன் உடம்பு ஆலயமாக விளங்குகிறது என்பதைத் திருமூலர் திருமந்திரப் பாடல் மூலம் அறிகிறோம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாயிகோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே[1]
(திருமந்- 1823)

உடம்பே ஆலயம் உயிரே சிவம் என்பதை உணர்த்துகிறது. உடம்பே ஆலயம், உடம்பினுள் இருக்கும் உள்ளம் கருவறை, உள்ளக் கருவறையில் இருக்கும் ஜீவன்தான் சிவம், வாயே கோபுர வாசல், கள்ளம் புரியும் புலன்கள் ஐந்தும் பெரிய விளக்கு என்று ஊனாலாகிய உடம்பை ஆலயத்துடன் ஒப்பிட்டு காட்டுகிறார்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஊனுடம்பை கோயிலாக கொண்டு பாடுகிறார்

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றிக் காட்டினோமே

(4.76.4)

இந்த உடம்பைக் கோயிலாகவும், மனமே இறைவனுக்கு அடிமையாகவும், வாய்மையே இலிங்கமாகவும், நேயமே பூஜைப்பொருளாக கொண்டு இறைவனை வழிபடுகிறோம். இப்பாடலும் மனதை கருவறயாகவும், உயிரை சிவமாகவும் பாவித்து காட்டுகிறார். இந்த உடம்பினுல் இறையாற்றல் உள்ளது என்ற அறிவியல் உண்மையை எடுத்துக்காட்டுகிறது.

ஆலயங்களில் உள்ள ஒவ்வொரு பகுதியும் அறிவியல் பூர்வமான மெய்யியலை உணர்த்துகின்றன. கோபுரம், கருவறை, விமானம், கொடிமரம், பிரகாரம், பலிபீடம், தலவிருட்சம், தீர்த்தம், மண்டபங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், தூண்கள், பூஜைகள், விழாக்கள், தீபாராதனை, உற்சவம் முதலியன சிறந்த தத்துவங்களை விளக்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. நம் ஆலயங்களின் விக்கிரகங்கள், புராணக்கதைகள், பூஜைமுறைகள், வழிபாடுகள், முதலியவற்றில் பொதிந்து கிடக்கும் அறிவியல் சார்ந்த உண்மைகளை இச் சமுகத்திற்கு எடுத்துக்காட்டுவது.

**கோபுரம்**

கோபுரம் ஆலயத்தின் நுழைவு வாயிலின் மேல் பகுதியில் எழுப்பப்படும் உயர்ந்த கட்டடம். கோபுரம் இறைவனின் தூல நிலையை உணர்த்துகின்றது. கோபுர தரிசனம் இறைவனின் பாத தரிசனம் ஆகும். இக் கட்டடத்தில் வாழ்வியல் முறையை காட்டும் சிற்பங்கள், விலங்குகள், தாவரங்கள், இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் உள்ளிட்ட அழகிய வேலைபாடுகள் கொண்டச் சிற்பங்கள் நிறைந்திருக்கும். கோபுரத்தின் உச்சியில் ஒன்று முதல் ஒன்பது வரை கலசங்கள் (மகுடம்) அமைந்திருக்கும், இக்கலசங்களில் உள்ள தானியம் இயற்கையின் தாக்கத்தில் (இடி, மினன்னல்) இருந்து நம்மை பாதுகாக்கும் தன்மை உடையது[2].

**கொடிமரம்**

கொடிமரம் என்பது மனிதனின் உடலில் உள்ள முதன்மையான முதுகு தண்டுவடத்தைக் குறிக்கும் ஒரு குறியீடு. மனிதன் நேராக அமர்ந்து முதுகு தண்டுவடத்தின் சூழுமுனை நாடியை

உயர்த்தினால் உயரிய மெய்ஞானம் பெறமுடியும் என்பதைக் காட்டும் விதமாக ஆலயங்களில் கொடிமரம் அமைக்கப்படுகிறது[3].

**பலிபீடம்**

பலிபீடம் என்பது மனிதர்களிடம் உள்ள தீய எண்ணங்களை போக்கும் அடையாளமாக விளங்குவது. ஆலயம் சென்று வழிபட்டு திரும்பும்போது பலிபீடத்தின் அருகில் விழுந்து வணங்குகிறோம், அப்போது தன்னிடம் உள்ள தீய குணத்தை இன்று முதல் பலியிடுகிறேன் என்று உறுதியேற்பது[4].

**கருவரை (கர்ப்பகிரகம்)**

ஆலயங்களில் பிரதான மூர்த்தியை வைத்து வணங்கும் இடமாகும். இவ்விடம் இருள் நிறைந்து காணப்படும். மனிதன் தோன்றும் நிலையைக் காட்டுகிறது. உயிர்கள் அனைத்தும் கருப்பையில் தோன்றுகின்றன என்பதைக் காட்டுகிறது. ஆலயங்களில் உள்ள கருவறையில் சிவனும், பெண்ணின் கருப்பையில் (ஜீவன்) உயிர் வளர்கின்ற அறிவியலை காட்டுகிறது[5].

**விமானம்**

விமானம் கருவறையின் மேல் பகுதியில் எழுப்பப்படும் மிக உயர்ந்த கட்டடம். விமானத்தை பொதுவாக ஷடங்க விமானம் என்பர். ஷடங்க விமானம் என்பது, ஆறு உறுப்புகளைக் குறிக்கும். அவை மனித உடலின் உறுப்புகளுடன் ஒப்புமை உடையவையாகும்.

1. அதிட்டானம் - பாதம்
2. பத்தி - கால்
3. பிரஸ்தரம் - தோள்
4. கண்டம் - கழுத்து
5. சிகரம் - தலை
6. ஸ்தூபி - மகுடம்

விமானத்தின் உச்சியில் ஒரு கலசம் (மகுடம்) மட்டும் இருக்கும்[6].

**தலவிருட்சம்**

விருட்சம் என்றால் தாவரங்களைக் குறிக்கும். மனிதர்களுக்கு மிகப்பெரிய மருத்துவ அறிவியலை உணர்த்துவதற்கு ஆலயங்களில் தலவிருட்சங்கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்தனர். ஒவ்வொரு இறைவனுக்கும் ஒவ்வொரு விருட்சம் அமைக்கப்பட்டு அதன் மருத்துவத் தன்மையை உணர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற இயற்கை மற்றும் சமூகச் சிந்தனையோடு ஆலயங்களில் இவ்வழிபாடு தோன்றியது[7].

**பிரகாரம்**

மனித உடல் அமைப்பைக் கருத்தில் கொண்டு ஆலயங்களில் பிரகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஒன்று முதல் ஏழு சுற்றுப்பாதைகள் இருக்கும். இதில் பெரும்பாலும் ஐந்து சுற்றுகள் (பிரகாரம்) உடையதாக இருக்கும். இவை நம் உடம்பின் ஐந்து கோசங்களைக் குறிக்கும் அடையாளமாக அமைக்கப்பட்டது.

1. **அன்னமய கோசம்** - இது பருவுடல், தூல உடல் உண்ணும் உணவால் காக்கப்படுவது.

2. **பிராணமய கோசம்** - இது நுண்ணுடல் உடலின் உள்ளும் புறமும் இருப்பது. உடலைச் சூழ்ந்து இயக்க வைப்பது.

3. **மனோமய கோசம்** - மன உடல் எண்ண அலைகளாலும், ஆசையாலும் ஐம்பொறிகளை இயங்க வைப்பது.

4. **விஞ்ஞானமய கோசம்** - அறிவுடன் மனவுடலோடு சேர்ந்து ஆய்வுச் செய்ய வைப்பது.

5. **ஆனந்தமய கோசம்** - இன்ப உடல் மனம், அறிவு இவற்றால் பேறும் ஆனந்தமே உண்மை ஆனந்தம் என்ற முறையில் இருப்பது. இந்த ஐந்தையும் கடந்து ஜீவன் தன்னை உணர்ந்து இறையோடு ஐக்கியமாதல் வேண்டும்[8].

**தீர்த்தம்**

மூர்த்திதலந் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல ச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

(பராபரக் கண்ணி-791)

என்று தாயுமானவர் விளக்குகிறார். ஆலயத்துக்குள் உள்ளது மூர்த்தி, தீர்த்தம் இவற்றை முறையாக தொடங்கினால் நல்வழி படுத்த சற்குரு வாய்க்கும் என்பது உண்மை. புனித தீர்த்தத்தில் நீராடினால் உடல், மனம், தூய்மையடைகிறது. வினையும் நீக்கப்பட்டு மூர்த்தியை வணங்கினால் வாழ்வில் மேன்மை பெறமுடியும்[9].

நம் ஆலயங்களைக் சற்று ஆழ்ந்து கவனித்தால் சிவலிங்கம், அதிகாரநத்தி, கொடிமரம் இம் மூன்றும் ஒரே வரிசையில் நிற்பது புலப்படும். சைவாகமம் கூறும் பதி, பசு, பாசம் இம் மூன்றின் வரிசையைக் காட்டுகிறது, பசுவாகிய நந்தி (ஆன்மா) உலகமாகிய கொடிமரத்தை நோக்கி நிற்குமாயின் சிற்றின்ப அனுபவங்களும் அவைகாரணமாகத் துன்பமே ஆன்மாவுக்கு புலப்படும். நந்தி (ஆன்மா) கொடிமரத்தைத் தாண்டி, உலகத்தை நோக்குவதைவிட்டு பதியாகிய இறைவனை நோக்கும்போதே அப்பசுவிற்கு பேரின்ப அனுபவம் கிடைக்கும் என்று சித்தாந்தம் கூறுகிறது[10].

**முடிவுரை**

ஆலயம் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதனை 'க்ஷேத்திரம் சரீரப்பிரஸ்தாரம்' எனக் கூறுகின்றனர். இதனை மனித உடம்பில் உள்ள பாதங்கள் கோபுரம், முழங்கால் அஸ்தான மண்டபம், தொடை நிருத்த மண்டபம், தொப்புள் பலிபீடம், மார்பு மகாமண்டபம், கழுத்து அர்த்தமண்டபம், சிரம் கருவறை, சிரத்தில் உள்ள இரு செவிகளில் வலது செவி தட்சிணாமூர்த்தி, இடது செவி சண்டிகேசுவரர், மார்பில் நடராஜர், கழுத்தில் நந்தி, புருவமத்தி லிங்கம், தலையின் உச்சி விமானமாகும்.

மனித உடம்பு கிடந்த நிலையில் ஆலயத்தோடு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. நின்ற நிலையல் ஆலயத்தில் உள்ள கருவறையின் மேல் அமைந்துள்ள விமானத்தோடு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. உடம்பை முறையாக பாதுகாத்தால் நமக்குள் இறை ஆற்றல் வெளிப்படும் மெய்ஞானம் பெறமுடியும். மனிதன் நெறிப்பட வாழ வழிகாட்டுவது சமயங்கள், சமயங்களின் மெய்யியல், அறிவியல்

சிந்தனைகளின் வெளிப்பாடு ஆலயங்கள். ஆலயங்கள் மனிதவடிவமாக விளங்குகிறது, உடம்பின் மேன்மையை ஒவ்வொருவரும் உணரவேண்டும் என்பதை உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று திருமந்திரம் தெளிவுப்படுத்துகிறது.

**பார்வை நூல்கள்**

1. திருமந்திரம், ஏழாம் தந்திரம், திருவாவடுதுறை ஆதீனம் வெளியீடு, 2011, ப.188

2. இந்துமத பாலபாடம், தருமை ஆதீனம் வெளியீடு, 2019, ப. 36

3. மேலது, ப.36

4. மேலது, ப.38

5. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், பழனி கோயில் வெளியீடு, 2002, ப. 43

6. மேல்நிலை முதலாமாண்டு, அறயியலும் இந்தியப் பண்பாடும், தமிழ் நாடு அரசு பாடநூல் கழகம், 2021, ப.59

7. மேலது, ப. 60

8. கோ. விசயராகவன், தி. மகாலெட்சுமி, திருமந்திரத்தில் ஆன்மிக நெறிகள், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், 2017, ப. 50

9. வடிவேலு முதலியார், தாயுமான சுவாமிகள் பாடல்கள், சாரதா பதிப்பகம், 2014, ப. 439.

10. ஏ. சொக்கலிங்கம், ஆலயங்களின் உட்பொருள் விளக்கம், சைவசித்தாந்த நூல்கழகம், 1987, ப. 45